**தெரனியகல பிரதேச சபை - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தெரனியகல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய தெளிவுபடுத்தும் தகவல்களின் பொழிப்புடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தெரனியகல பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க

கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பிரதேச சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக காலவரையறைகளினுள் மற்றும் உரிய சட்ட விதிகளிற்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீண்ட காலமாக 04 சொத்து மற்றும் பொறுப்பு மீதிகளில் மற்றும் அதற்குரிய பதிவேட்டு மீதிகளிற்கு இடையே காணப்பட்ட வித்தியாசத்தை சரியான அங்கீகாரமின்றி திரண்ட நிதியத்திற்கு சீராக்கிய காரணத்தால் திரண்ட நிதியம் மற்றும் ஊழியர் கடன் கணக்கு ரூபா 637,487 கூடுதலாகவும், வைப்புக் கணக்கு மற்றும் முற்பணக் கணக்கு ரூபா 3,657,571 குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டு இருந்தன. | இணங்கியுள்ளதுடன் இவ் வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிய முடியாததால் பதிவேடுகளின் மீதியை ஜர்னல் குறிப்பு மூலம் சீராக்க செயலாளரின் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் பெற்றுள்ளதென. | கணக்குகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் 2 கணக்கு மீதிகளில் காணப்பட்ட சொத்துப் பதிவேட்டுடனான ரூபா 805,299 ஆன வித்தியாசத்தை உரிய அங்கீகாரமின்றி சீராக்கப்பட்டு இருந்தது. | இணங்கியுள்ளதுடன் 09 இலக்க செயலாளரின் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் பெற்றுள்ளதென. | - மேற்படி - |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதக்கூற்றுக்கள் பிரகாரம் 03 கணக்கு விடயங்களின் மீதிகள், அட்டவணையுடன் இணக்கம் செய்கையில் ரூபா 47,882,571 ஆன வித்தியாசம் நிலவியது. | இணங்கியுள்ளதென. | வித்தியாசத்தை இணக்கம் செய்ய வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 11,947,312 ஆன் நிதியல்லா சொத்துக்கள் மற்றும் பொது வைப்பிற்கான அட்டவணை சமர்ப்பிக்கப்படவில்லை. | ஏற்றுக் கொண்டுள்ளதென. | குறித்த சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும். |

1.7 **இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 திசெம்பர் 29 திகதிய இலக்கம் 30/2016 பொது நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் 09 வாகனங்களில் எரிபொருள் பாவனை பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொண்டுள்ளதென. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

2. **நிதி மீளாய்வு**

2.1 **நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,705,276 ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,805,812 ஆனது.

2.2 **வருமான நிர்வாகம்**

2.2.1 **மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்**

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| | **2023** | | | | **2022** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பிடப் பட்ட வருமானம்** | **பில்லிட்ட வருமானம்** | **சேகரித்த வருமானம்** | **திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை** | **மதிப்பிடப்ப ட்ட வருமானம்** | **பில்லிட்ட வருமானம்** | **சேகரித்த வருமானம்** | **திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 13,989,745 | 14,934,636 | 11,209,907 | 3,724,728 | 8,223,845 | 9,169,126 | 8,665,439 | 2,421,200 |
| வாடகை | 7,789,325 | 8,741,456 | 8,654,402 | 87,053 | 7,246,849 | 8,152,080 | 8,281,477 | 63,684 |
| அனுமதிப்பத் திர கட்டணம் | 1,140,100 | 1,526,275 | 1,485,775 | 40,500 | 790,100 | 1,264,476 | 1,305,476 | 9,100 |
| ஏனைய வருமானம் | 3,849,000 | 6,330,632 | 5,547,729 | 782,903 | 2,553,500 | 5,007,633 | 4,856,840 | 711,166 |
| மொத்தம் | 26,768,170 | 31,532,999 | 26,897,813 | 4,635,184 | 18,814,294 | 23,593,315 | 23,109,232 | 3,205,150 |

### 2.2.2. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 திகதியன்று ரூபா 296,233 ஆன நிலுவை ஏக்கர் வரி மீதியினுள் 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 255,363 ஆன மீதி காணப்பட்டது. | ஏற்றுக் கொண்டுள்ளதெனவும் நிலுவையை அறவிட நடவபடிக்கை எடுப்பதெனவும். | வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வியாபார கணிப்பீட்டின் பிரகாரம் 489 வியாபாரங்களை இனங்கண்டு இருந்த போதும், வியாபார வரி பதிவேட்டின் பிரகாரம் 984 நிறுவனங்களிடமிருந்து வரி கிடைத்திருந்ததுன. அதன் பிரகாரம் 495 வியாபார அலகுகளை இனங்காணாததால் வியாபார கணிப்பீட்டின் சரியான தன்மை கேள்வியாக இருந்தது. | ஏற்றுக் கொண்டுள்ளதென. | வியாபார கணிப்பீட்டை சரியாக மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | 2023 ஆண்டில் உயிர்வாயு அலகொன்று நிர்மாணிக்கப்பட்டு இருந்த போதும், அதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் உயிர்வாயு மிகச் சிறியளவு மாத்திரம் பயன்படுத்தப்பட்டு அதிகளவு எரித்து அழிக்கப்பட்டு வருகின்றது. இந்த அனைத்து நிர்மாணிங்களிற்கும் செலவிடப்பட்ட ரூபா 8,703,078 இனை வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக பயன்படுத்த சபைக்கு இயலாதிருந்தது. | எரிக்கப்படும் வாயுவை பயன்படுத்தி எதிர்காலத்தில் உளர் இயந்திரமொன்றை பொருத்தும் கருத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | உயிர் வாயு அலகை வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியன்று ரூபா 33,861,754 ஆன வேலை கடன்கொடுனர் மீதியினுள் 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 24,396,200 ஆன மீதி நிலவியது. | ஏற்றுக் கொண்டுள்ளதென. | மீதியை தீர்த்துக் கொள்ள வேண்டும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியன்று ரூபா 21,148,475 ஆன கடன்படுனர் மீதியினுள் 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 2,949,478 ஆன மீதி நிலவியது. | - மேற்படி - | - மேற்படி - |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கெப் வண்டடியொன்றிற்கு 2023 ஆண்டில் மேற்கொண்ட ரூபா 313,800 ஆன திருத்தமொன்றிற்காக பெறுகைகள் நடைமுறையை பின்பற்றி இருக்கவில்லை. | பொது நிர்வாக சுற்றறிக்கை 30/2016 பிரகாரம் பெறுகைகள் நடைமுறையை பின்பற்றியுள்ளதென. | பெறுகைகள் நடைமுறையை பின்பற்ற வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகார ஆளணி எண்ணிக்கை 65 இல் 17 வெற்றிடங்கள் மற்றும் 04 பேர்களின் மிகையும் நிலவின. அது தவிர, தொழில் அடிப்படையில் 19 பதவிகளும், அமைய அடிப்படையில் ஒருவரும் ஆட்சேர்க்கப்பட்டு இருந்தனர். அவ்வாறே, ஏற்பவருக்கு தனிப்பட்ட அடிப்படையில் 13 பேர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் 02 பேர்கள் எவ்வித அங்கீகாரமும் இன்றி சேபையில் ஈடுபடுத்தியிருந்தனர். | பற்பணி அபிவிருத்தி செயல் உதவியாளர் நியமனம் அங்கீகார ஆளணியினரின் வெற்றிடங்களிற்காக நியமிக்கப்பட்டனர். | புதிய பதவியை அங்கீகரித்துக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | அமைய மற்றும் தொழில் அடிப்படையில் ஆட்சேர்த்திருந்த 23 பேர்களில் 08 பேர்கள் தமது நிரந்த பதிவிக்கு உரித்தற்ற ஏனைய பதவிகளில் சேபையில் ஈடுபடுத்தப்பட்டு இருந்தனர். | சேவை யாப்பை திருத்தும் போது அனைத்து தொழிலாளர் பதவிகளும் வேலை/கள தொழிலாளர் பதவிக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர். | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஆட்சேர்த்த நபர்களை உரிய பணிகளில் ஈடுபடுத்த வேண்டும். |
| (இ) | ஆண்டு 02 முதல் ஆண்டு 24 வரையான காலம் கடந்திருந்த 11 அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 358,597 ஆன கடன் மீதியை மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவிட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொண்டுள்ளதென. | நிலுவை ஊழியர் கடன் மீதியை அறவிட வேண்டும். |